தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# தமிழறிவுப் போட்டி
# எட்டாம் வகுப்பு
# 2016

# தமிழறிவுப் போட்டி – 2016

## ஆண்டு - 8

## ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

## முதல் சுற்று - 10 கேள்விகள்

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டுப் 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

# முதற் சுற்று

# 10 கேள்விகள்

# முதல் சுற்றின் 10 கேள்விகள் ஆசிரியரால் வாசிக்கப்படும்

1.

பெருங்கடல் என்பதைக் குறிக்கும் சொல்.?

1. நீரிணை

2. ஏரி

3. சமுத்திரம்

1. விடை:

சமுத்திரம்

2. இராமாயணத்தை தமிழில் எழுதியவர் யார்?

# 2. கம்பர்

3.பொன்விழா எப்போது கொண்டாடப்படும்?

# 3. 50 வது ஆண்டு நிறைவில்

4. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான **வளையாபதியில்** உள்ள ஆபரணம் எது?

4 விடை:

வளையல்

5. தமிழில் உள்ள உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை?

5 விடை: 216

6. ஆத்திசூடி என்ற நூலை எழுதியவர் யார்?

6 விடை: ஔவையார்

7.

தேர்தலில் போட்டியிடுபவரை எப்படி அழைப்பர்?

Year 8 - 2016

7 விடை:  வேட்பாளர்

8.

இத் திருக்குறளை நிறைவு செய்க:

**கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன்**

**------------------------------------**

8 விடை:

நற்றாள் தொழாஅர் எனின்

9.

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசை கொண்டு வாழியவே என்பதில் வரும் இசை என்றால் என்ன?

விடை:

புகழ்

10.

பின் வருவனவற்றில் ஒன்று வேறுபட்டது. அது எது?

1. ஞாயிறு
2. கதிரவன்
3. பகலவன்
4. மதி

10. விடை:

4. மதி

முதற் சுற்று முடிவடைந்தது

இரண்டாம் சுற்று - 10 கேள்விகள்

11.

தமிழில் மெய் எழுத்துக்கள் மூன்று வகைப்படும்.

அதில் ஒன்று வல்லினம்.

மற்றய இரண்டையும் கூறுக?

Year 8 - 2016

11. விடை:

மெல்லினம்,

இடையினம்

12.

ஒருவர் பிறந்து இறக்கும்வரை உள்ள காலத்தை எப்படி அழைப்பர்?

12 விடை:

ஆயுட்காலம்

13. பழமொழியினை பூர்த்தி செய்க.

**காற்றுள்ள போதே ______________**

**_________________**

13 விடை:

**தூற்றிக் கொள்**

14. **கவிச்சக்கரவர்த்தி** என அழைக்கப்படுபவர் யார்?

14 விடை:

கம்பர்

15 எமது கல்வி நிலையம் இந்த ஆண்டு எத்தனையாவது கலைவிழாவை கொண்டாடியது?

15 விடை: 29ஆவது ஆண்டு

16. பாண்டவர்களில் மல்யுத்தத்தில் சிறந்தவன் யார்?

16 விடை:

பீமன்

17. பாட்டுக்கொரு புலவன் என அழைக்கப்படுபவர் யார்?

17 விடை:

பாரதியார்

18.

தாலாட்டு என்றால் என்ன?

18

விடை: குழந்தைகளைத் தூங்கவைக்க தாய்மார்கள் பாடும் பாடல்.

19.

மருதநிலம் என்றால் என்ன?

19 விடை:

வயலும் வயல்சார்ந்த இடமும்

20.

Internet என்பதன் தமிழ்ப்பெயர் என்ன?

20 விடை:

இணையம்

இரண்டாம் சுற்று முடிவடைந்தது
மூன்றாம் சுற்று - 10 கேள்விகள்

21.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதில் கேளிர் என்றால் என்ன?

21. விடை: உறவினர்

22.

அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற தமிழ் குழந்தைக் கவிஞர் ஒருவரின் பெயர் கூறுக.

22. விடை:

கவிஞர் அம்பி அல்லது
நா. மகேசன் (வானொலி மாமா)

அட்டவணைக் கேள்விகள்

ஆசிரியர் கேள்விகளை வாசிக்கலாம்

அட்டவணை கேள்விகள்- சொல்லாக்கம்

விடைகள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் இருக்கும்.

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| A | | | | | |
| B | | | | | |
| C | | | | | |
| D | | | | | |
| E | | | | | |

உதாரணக் கேள்வி-

யானையை இப்படியும் அழைக்கலாம்.

(அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்)

உதாரணக் கேள்வி-

யானையை இப்படியும் அழைக்கலாம்.

(அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்)

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| A | க | பு | ல் | லை | சா |
| B | ரி | று | அ | த் | தை |
| C | ப | மு | த் | து | ளி |
| D | வி | ம் | கு | ரு | ளை |
| E | வ | ளை | யா | ப | தி |

உதாரணக் கேள்வி-
யானையை இப்படியும் அழைக்கலாம்.
(அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்) விடை A-1 கரி

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| A | க | பு | ல் | லை | சா |
| B | ரி | று | அ | த் | தை |
| C | ப | மு | த் | து | ளி |
| D | வி | ம் | கு | ரு | ளை |
| E | வ | ளை | யா | ப | தி |

# 23. செல்வத்திற்கு எதிர்ச்சொல்

•

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | ப | னி | த | பே | ர | லை |
| B | த | நெ | நூ | ஏ | எ | நூ |
| C | வி | ரு | ந் | து | ந் | ல |
| D | வ | கீ | த | ம் | தி | க |
| E | று | த | ம் | தீ | ப | ம் |
| F | மை | தா | ன | ம் | ஓ | டு |

23. விடை:

D1 வறுமை

24. கடல் கொந்தளிக்கும் போது எழுவது

•

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | ப | னி | த | பே | ர | லை |
| B | த | நெ | நூ | ஏ | எ | நூ |
| C | வி | ரு | ந் | து | ந் | ல |
| D | வ | கீ | த | ம் | தி | க |
| E | று | த | ம் | தீ | ப | ம் |
| F | மை | தா | ன | ம் | ஓ | பு |

24. விடை:

A4 பேரலை

# 25. பாடலுக்கு இன்னொரு பெயர்

•

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | ப | னி | த | பே | ர | லை |
| B | த | நெ | நூ | ஏ | எ | நூ |
| C | வி | ரு | ந் | து | ந் | ல |
| D | வ | கீ | த | ம் | தி | க |
| E | று | த | ம் | தீ | ப | ம் |
| F | மை | தா | ன | ம் | ஓ | பு |

25. விடை:

D2 கீதம்

# 26. விளையாடும் இடம்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | ப | னி | த | பே | ர | லை |
| B | த | நெ | நூ | ஏ | எ | நூ |
| C | வி | ரு | ந் | து | ந் | ல |
| D | வ | கீ | த | ம் | தி | க |
| E | று | த | ம் | தீ | ப | ம் |
| F | மை | தா | ன | ம் | ஓ | பு |

26. விடை:

F1 மைதானம்

27. இது வந்தால் இருள் விலகும்

•

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | ப | னி | த | பே | ர | லை |
| B | த | நெ | நூ | ஏ | எ | நூ |
| C | வி | ரு | ந் | து | ந் | ல |
| D | வ | கீ | த | ம் | தி | க |
| E | று | த | ம் | தீ | ப | ம் |
| F | மை | தா | ன | ம் | ஓ | பு |

27. விடை:

E4 தீபம்

# 28. விருந்தினருக்கு நாம் கொடுத்து மகிழ்வது

•

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | ப | னி | த | பே | ர | லை |
| B | த | நெ | நூ | ஏ | எ | நூ |
| C | வி | ரு | ந் | து | ந் | ல |
| D | வ | கீ | த | ம் | தி | க |
| E | று | த | ம் | தீ | ப | ம் |
| F | மை | தா | ன | ம் | ஓ | பு |

28. விடை:

C1 விருந்து

29. எமது என்பதை எம் என்பது போல் தமது என்பதை இப்படிச் சொல்வோம்.

•

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | ப | னி | த | பே | ர | லை |
| B | த | நெ | நூ | ஏ | எ | நூ |
| C | வி | ரு | ந் | து | ந் | ல |
| D | வ | கீ | த | ம் | தி | க |
| E | று | த | ம் | தீ | ப | ம் |
| F | மை | தா | ன | ம் | ஓ | பு |

29. விடை:

E2 – தம்

30. நூல்களை இரவல் பெறும் இடம்

.

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| A | ப | னி | த | பே | ர | லை |
| B | த | நெ | நூ | ஏ | எ | நூ |
| C | வி | ரு | ந் | து | ந் | ல |
| D | வ | கீ | த | ம் | தி | க |
| E | று | த | ம் | தீ | ப | ம் |
| F | மை | தா | ன | ம் | ஓ | டு |

30. விடை:

B6 நூலகம்

# மூன்றாம் சுற்று நிறைவுபெற்றது

# அரைஇறுதிச் சுற்று
# 15 கேள்விகள்

1.

வாய்மையில் சிறந்தவன் எனப் போற்றப்படும் மன்னன் யார்?

1. விடை:

அரிச்சந்திரன்

2.

சந்திரனைக் குறிக்கும் சொல் இது

1. நட்சத்திரம்
2. ஞாயிறு
3. திங்கள்

2. விடை

3. திங்கள்

3. ஓரெழுத்துச் சொல்லைக் கூறுக:

# அரசனை குறிக்கும் சொல்

3. விடை:

கோ

4. பின்வருவனவற்றின் எதிர்ச்சொல் தருக.

நவீன கட்டடம்

4. விடை:

புராதன கட்டடம்

பழைய கட்டடம்

5.

விகடமாகவும் நகைச்சுவையாகவும் பேசுபவனைக் குறிக்கும் சொல் எது?

5. விடை:

விகடகவி

6. சிட்னி தமிழ் அறிவகம் வருடந்தோறும் அனுட்டிக்கும் கொடிதினம் எதனை நினைவுகூர்ந்து நடைபெறுகிறது?

**விடை:**

யாழ் பொது நூலகம் எரியூட்டப்பட்டதை நினைவுகூர்ந்து நடைபெறுகிறது

7.

தமிழ் மறை எனப்படுவது எந்த நூலைக் குறிக்கும்?

# 7. விடை

திருக்குறள்

8.

அகர வரிசைப்படி சொற்களுக்கு பொருள் கூறும் நூல் எது?

8. விடை:

அகராதி

9. புராதனப் பொருட்களைச் சேர்த்து வைக்கும் இடம் எது?

9. விடை:

நூதனசாலை

10

விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது என்ன?

# 10 தீர்ப்பு

11.

**இன்பம்** என்பதற்கு எதிர்ச் சொல் தருக

11. விடை:

துன்பம்

# 12.

வேறுபட்ட சொல் எது?

1. இயல
2. அரங்கு
3. நாடகம்
4. இசை

12. விடை:

2. அரங்கு

13.

வைர விழா என்றால் என்ன?

13. விடை:

75 ஆவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுவது

14. ஒருவர் தன் கதையைக் கூறுவதை எப்படி அழைப்பர்?

14. **விடை: சுயசரிதை**

15. “போற்றுதல்” என்ற சொல்லின் பொருத்தமான எதிர்ப்பொருட் சொல்லைத் குறிப்பிடுக?

1. வாழ்த்துதல்
2. புகழ்தல்
3. தூற்றுதல்
4. ஏற்றுதல்

15. விடை:

3. தூற்றுதல்

# அரை இறுதிப்போட்டி நிறைவுற்றது.

# இறுதிப்போட்டி

# 15 கேள்விகள்

அட்டவணைக் கேள்விகள்

ஆசிரியர் கேள்விகளை வாசிக்கலாம்

# அட்டவணை கேள்விகள்- சொல்லாக்கம்

விடைகள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் இருக்கும்.

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| A | | | | | |
| B | | | | | |
| C | | | | | |
| D | | | | | |
| E | | | | | |

உதாரணக் கேள்வி-

மிக நல்லவனைக் குறிக்கும் சொல்.

(அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்)

உதாரணக் கேள்வி-

மிக நல்லவனைக் குறிக்கும் சொல்.

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | உ | த் | த | ம | ன் | | பி |
| 2 | ண் | | லை | | | கா | ணி |
| 3 | டி | | மு | ன் | ர் | ன | |
| 4 | | இ | றை | | | க | வி |
| 5 | | ல | | ஈ | ர | ம் | |
| 6 | கா | வ | ல் | | வை | | ச |
| 7 | வி | ம் | ப | ம் | | ளி | கி |

விடை:

A1- உத்தமன்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக!

________ நிலம் வேண்டும் என்றார் பாரதியார்

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | உ | த் | த | ம | ன் | | பி |
| 2 | ண் | | லை | | | கா | ணி |
| 3 | டி | | மு | ன் | ர் | ன | |
| 4 | | இ | றை | | | க | வி |
| 5 | | ல | | ஈ | ர | ம் | |
| 6 | கா | வ | ல் | | வை | | ச |
| 7 | வி | ம் | ப | ம் | | ளி | கி |

விடை:

F2 – காணி

## 2. வீட்டில் இதற்காக நாயை வளர்ப்பர்

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | உ | த் | த | ம | ன் | | பி |
| 2 | ண் | | லை | | | கா | ணி |
| 3 | டி | | மு | ன் | ர் | ன | |
| 4 | | இ | றை | | | க | வி |
| 5 | | ல | | ஈ | ர | ம் | |
| 6 | கா | வ | ல் | | வை | | ச |
| 7 | வி | ம் | ப | ம் | | ளி | கி |

விடை:

A6 – காவல்

# 3. இதன் ஒத்த சொல் நோய்

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | உ | த் | த | ம | ன் | | பி |
| 2 | ண் | | லை | | | கா | ணி |
| 3 | டி | | மு | ன் | ர் | ன | |
| 4 | | இ | றை | | | க | வி |
| 5 | | ல | | ஈ | ர | ம் | |
| 6 | கா | வ | ல் | | வை | | ச |
| 7 | வி | ம் | ப | ம் | | ளி | கி |

விடை:

G1 – பிணி

4. இராமர் இங்கு வாழ்ந்தார்

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | உ | த் | த | ம | ன் | | பி |
| 2 | ண் | | லை | | | கா | ணி |
| 3 | டி | | மு | ன் | ர் | ன | |
| 4 | | இ | றை | | | க | வி |
| 5 | | ல | | ஈ | ர | ம் | |
| 6 | கா | வ | ல் | | வை | | ச |
| 7 | வி | ம் | ப | ம் | | ளி | கி |

விடை:

F2 – கானகம்

# 5. சந்ததி என்றும் சொல்லுவர்

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | உ | த் | த | ம | ன் | | பி |
| 2 | ண் | | லை | | | கா | ணி |
| 3 | டி | | மு | ன் | ர் | ன | |
| 4 | | இ | றை | | | க | வி |
| 5 | | ல | | ஈ | ர | ம் | |
| 6 | கா | வ | ல் | | வை | | ச |
| 7 | வி | ம் | ப | ம் | | ளி | கி |

விடை:

C1 – தலைமுறை

6.

திருக்குறளின் மூன்று வகைப் பிரிவுகள் எவை?

விடை:

அறத்துப்பால்

பொருட்பால்

இன்பத்துப்பால் (காமத்துப்பால்)

7.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல் எது?

விடை:

ஐம்பொறி

8. “அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” என்ற பழமொழிக்கு பொருத்தமான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

1. நாம் ஒன்று பட்டுப் பொருள் சேர்க்க வேண்டும்
2. ஒற்றுமையே பலம் தரும்
3. பாதையில் திரண்டு சென்றால் விபத்து ஏற்படும்.

விடை:

2. ஒற்றுமையே பலம் தரும்

9.

நிகழ்ச்சி ஒன்றை முதன்முதலில் மேடையேற்றுவதை இப்படி அழைப்பர்.

1. அரங்கேற்றம்
2. ஒத்திகை
3. நிகழ்ச்சி

விடை:

1. அரங்கேற்றம்

10.

ஆற்றில் கரைத்த புளி போல என்ற உவமைத் தொடரின் பொருள் என்ன?

1. முயற்சியுடமை
2. பயனற்ற செலவு
3. ஒற்றுமை
4. நிலையில்லாமை

விடை:

2. பயனற்ற செலவு

11. வஞ்சினம் என்பது யாது?

1. வருந்தினர்
2. ஒழுக்கம்
3. கடுங்கோபம்
4. சபதம்

விடை:

3. கடுங்கோபம்

12.

அவசரக்குடுக்கை என்று யாரைக் கூறுவர்?

1. பதற்றக்காரன்
2. எளிதில் ஏமாறுபவன்
3. மதிப்பில்லாதவன்

விடை:

1. பதற்றக்காரன்

13.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர்காலம் எப்படிப் போற்றப்படுகிறது?

விடை:

பொற்காலம்

14. எமது கல்வி நிலையத்தின் மகுட வாசகம்

“ தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

இங்கு நேர் என்பதன் பொருள் என்ன?

விடை:

இணையானது

சமமானது

15. ‘காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்’ என்ற பழமொழி வலியுறுத்தும் உண்மை?

1. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்த வேண்டும்.
2. காற்றடிக்கும் போது வீடு துப்பரவு செய்தல் வேண்டும்.
3. காற்றடிக்கும் திசைக்கேற்ப வீடு துப்பரவு செய்தல் வேண்டும்.
4. காற்று இருக்கின்ற போதே மற்றவர்களைத் தூற்ற வேண்டும்.

விடை:

1. கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்த வேண்டும்.

# இறுதிப்போட்டி நிறைவுற்றது.

# நன்றி



# மேலதிக வினாக்கள் தேவைப்பட்டால்.........

1. **அரவம்** என்பது எதனைக் குறிக்கும்?

1. யானை
2. பாம்பு
3. எலி
4. குதிரை

விடை:

2. பாம்பு

2.

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் -
தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

இந்த உலகத்தில் ஒழுங்காக மழை பெய்ய வேண்டுமாயின் மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

2. விடை:

நல்லவர்களாக

3. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு

இதில் இடுக்கண் என்னும் சொல் எதைக் குறிக்கிறது?

3. விடை:

துன்பம்

4. “உச்சி குளிருதல்” என்ற மரபுத்தொடரின் கருத்து என்ன?

4. விடை:

மிகவும் மகிழ்ச்சியடைதல்